**கூடுதல் சார்பு நீதிமன்றம், பழனி**

**S.C.No.56/2020**

தேதி – 07.08.2025

(அ.சா.2) – திருமதி. தேவி

**எதிரிகள் – ஆஜர்**

சாட்சி மனுவின்பேரில் மீண்டும் அழைக்கப்பட்டு சத்தியப் பிரமாணம் செய்து வைக்கப்பட்டு எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை செய்யப்படுகிறார்.

**குறுக்கு விசாரணை:**

1. என்னுடைய சொந்த ஊர் பழைய ஆயக்குடி. எனக்கு திருமணமான 2000 ஆண்டிலிருந்து பழைய ஆயக்குடியில் குடியிருந்தோம். மடத்திற்கு குடி வந்து 11 ஆண்டுகள் ஆகிறது. மடத்தில் குடியிருப்பதற்கு தனியாக வீடு உள்ளதா என்றால் உள்ளது. அதில் சமையலறை மற்றும் படுக்கை அறையை நாங்கள் உருவாக்கியுள்ளோம். மடத்தில் எத்தனை கடைகள் மற்றும் தங்கும் அறைகள் உள்ளது என்றால் சம்பவ சமயம் ஒரு ஹோட்டல் இருந்தது. சிப்ஸ் கடை ஒன்றும், 2 வது எதிரி நடத்தி வந்த டீ கடையும் இருந்தது. அப்போது 8 தங்கும் அறைகள் இருந்தது. திருமண மண்டபமும் மடத்தில் இருந்ததா என்றால் ஆம்.

2. என் நாத்தனாரின் கணவரான முருகன் என்பவர் சம்பவ சமயம் மடத்தை குத்தகைக்கு எடுத்திருந்தார். தற்போது வேறு ஒருவர் குத்தகைக்கு எடுத்துள்ளார். அவர் பெயர் எனக்கு தெரியவில்லை. சம்பவ சமயம் கடைகள் மற்றும் அறைகளை நாங்கள் பராமரித்தோமா என்றால் ஆம். நாங்கள் மடத்தில் குடியிருந்ததற்கு வாடகை கொடுத்தோமா என்றால் இல்லை. (சாட்சி மறுபடியும் மாற்றி வாடகை கொடுத்தோமா என்று தெரியவில்லை என்று கூறுகிறார்). மேற்சொன்ன முருகன் என்பவர் பாலசமுத்திரத்தில் குடியிருக்கிறார். பாலசமுத்திரத்திற்கும் மடத்திற்கும் இடையில் 2 கிலோ மீட்டர் தூரம் என்றால் எனக்கு சரியாகத் தெரியாது.

3. கடைகள் மற்றும் அறைகளுக்கு எவ்வளவு வாடகை வந்தது என்று எனக்கு சரியாகத் தெரியாது. அந்த கட்டிடம் முழுவதற்கும் சேர்த்து எத்தனை மின் இணைப்புகள் இருந்தது என்று கேட்டால் ஆரம்பத்தில் இரண்டு மின் இணைப்புகள் இருந்தது. அந்த மின் இணைப்பிற்கு கட்டணங்கள் யார் செலுத்துவார்கள் என்றால் நான் செலுத்துவேன். அதன் மின் இணைப்பு எண்கள் என்னவென்றால் ஒரு எண்.980 மற்றொரு எண் என்னவென்று ஞாபகமில்லை. 2ம் எதிரியின் கடைக்கு எந்த மின் இணைப்பிலிருந்து மின்சாரம் சென்றது என்றால் மின் இணைப்பு 980ல் இருந்துதான் சென்றது.

4. நாங்கள் குடியிருந்த மடம் எங்கள் சமுதாயத்தைச் சேர்ந்த பழனி வட்டத்தில் பல ஊர்களிலும் குடியிருக்கும் மக்களுக்குப் பொதுவான மடம் என்றால் சரிதான். சம்பவ சமயம் முதல் தற்போது வரை மடத்தின் தலைவராக ராமசாமி என்பவர் இருக்கிறார். மற்ற நிர்வாகிகள் பெயர் கூற இயலுமா என்றால், செயலாளர் பெயர் சுப்பிரமணி, பொருளாளர் பெருமாள். 11 ஊர்களுக்கும் 11 பேர் நிர்வாகிகளாக இருக்கிறார்கள். மடத்தின் அருகில் உள்ள சாலை பக்தர்கள் மற்றும் பொதுமக்கள் அதிகம் நடமாடும் பகுதி என்றால் சரிதான். மடத்தின் நான்குபுறமும் வணிக வளாகம் மற்றும் கடைகள் உள்ளது என்றால் சரிதான்.

5. மடத்திற்கு அருகில் ஆட்டோ ஸ்டாண்டு இருந்ததா என்றால் சம்பவ சமயம் இல்லை, தற்போது உள்ளது. சுபம் லாட்ஜ் உள்ளிட்ட மற்ற விடுதிகளுக்கும் அந்த வழியாகத்தான் செல்லவேண்டும் என்றால் சரிதான். 2ம் எதிரி தற்போது மடத்திற்கு எதிர்புறம் கடை நடத்தி வருவதாகச் சொன்னால் எனக்கு சரியாகத்தெரியாது. 1ம் எதிரி நாங்கள் அங்கு குடி வந்த காலம் முதல் அப்பகுதியில் கடை நடத்தி வந்தார், தற்போதும் அங்குதான் கடை நடத்தி வருகிறாரா என்று எனக்கு தெரியாது. என் கணவர் வருவதற்கு முன்பாக என்னிடம் யாரும் சண்டை பிடித்தார்களா என்றால் EB வேலை பார்க்க வந்தவர்களுக்கு வழி விடவில்லை என்பது தொடர்பாக நான் கேட்டபோது என்னை குட்டி என்பவர் அடித்தார். மேற்படி சம்பவம் காலை 11.00

மணியளவில் EB அலுவலகத்திலிருந்து ஊழியர்கள் வந்த பிறகு நடந்தது. சரியாக எத்தனை மணிக்கு நடந்தது என்று எனக்கு தெரியாது. மேற்படி விபரத்தை நான் போலீசார் விசாரணையில் சொல்லியுள்ளேனா என்றால் ஞாபகமில்லை.

6. நானோ, என் தாயாரோ நான் தாக்கப்பட்ட சம்பவம் குறித்து காவல் நிலையத்தில் புகார் கொடுத்தோமா என்றால் இல்லை. என் தாயார், என் மகன், நான் ஆகியோர் நான் தாக்கப்பட்ட சமயம் இருந்தோம். அப்போது மடத்தில் வேறு யார் இருந்தார்கள் என்றால் நானும், என் தாயாரும், என் குழந்தைகளும்தான் இருநதோம். EB லைன் அறுந்து தொங்கியது தொடர்பாக நாங்கள் EB பணியாட்களை அழைத்திருந்தோம். ஏதேனும் அசம்பாவிதம் நடந்துவிடும் என்று அழைத்திருந்தோம். எங்களுக்கு மின்சாரம் வந்துகொண்டுதான் இருந்தது. எங்களிடம் ஜெனரேட்டர் இருந்ததால் அதில் இருந்து மின்சாரம் வந்ததா என்று எனக்கு சரியாகத் தெரியவில்லை. EB அலுவலகத்திற்கு நான் தகவல் சொல்லவில்லை. யார் சொன்னார்கள் என்று எனக்கு சரியாகத் தெரியவில்லை.

7. என் கணவர் சம்பவத்திற்கு முதல் நாள் வேலைக்குச் சென்றுவிட்டு இரவு ஓய்விற்கு செட்டில் தங்காமல் வீட்டிற்கு வந்துவிடுவார். மீண்டும் காலை பணி நேரத்திற்கு சென்றுவிட்டு மதியம் வந்துவிடுவார். அன்றைய தினம் அதிகாலையில் நாங்கள் தூங்கிக்கொண்டிருக்கும்போதே வேலைக்கு கிளம்பிவிட்டார். அதற்கு முன்பும் அதே நேரத்தில்தான் என் கணவர் பணிக்குச் சென்றாரா என்றால் அப்படியில்லை, பணி நேரம் என்னவோ, அதற்குத் தகுந்தாற்போல் வேலைக்குச் சென்று வருவார். சம்பவம் சமயம் என்னுடைய மகன் கோயம்புத்தூரில் கல்லூரியில் படித்து வந்தார். என் மகள் பள்ளியில் படித்து வந்தார்.

8. ஆயக்குடியில் இருப்பது எங்களுடைய சொந்த வீடு என்றால் சரிதான். அன்றைய தினம் என் கணவர் கோவை வழித்தடத்தில் வேலை

பார்த்தார். என்னை தாக்கிய சம்பவம் குறித்து நான் என் கணவருக்கு எப்போது தகவல் கொடுத்தேன் என்றால் அவர் வீட்டிற்கு வருவதற்கு முன்பாக தகவல் கொடுத்தேன். சுமார் 1.30 மணிக்கு தகவல் கொடுத்திருப்பேனா என்றால் இருக்கலாம். என் கணவர் 2வது எதிரியின் தாயாரிடம் சம்பவம் குறித்து விசாரிக்கப்போனாரா என்றால் 2வது எதிரியின் கடைக்கு விசாரிப்பதற்காக சென்றார், அங்கு 2வது எதிரி இருந்தார், அவரது தாயார் இருந்தாரா என்று எனக்கு தெரியவில்லை.

9. 2வது எதிரியின் சகோதரர்கள் சம்பவ இடத்தில் இருந்தார்களா என்று நான் பார்க்கவில்லை. என் கணவர் பணி முடிந்து சுமார் 2.00 மணிக்கு திரும்பி வருவார். சம்பவம் நடந்ததாகச் சொல்லப்படும் இடம் எது என்றால் மடத்தின் வாசல். நகராட்சிக் கழிப்பறை மடத்திலிருந்து பார்க்கும் தூரத்தில்தான் இருந்தது. அங்கு எப்போதும் பக்தர்கள் சென்று வருவார்கள் என்றால் சரிதான். என்னுடைய கணவர் தாக்கப்பட்டதாகச் சொல்லப்படும் நேரத்தில் மண்டபத்திற்கு உள்ளும் வெளியிலும் யார், யார் இருந்தார்கள் என்று என்னால் கூற இயலுமா என்றால் நானும் என் தாயாரும் இருந்தோம். கடைக்காரர்கள் அருகில் இருந்தார்கள்.

10. என் கணவரை மருத்துவமனைக்கு யார் அழைத்துச் சென்றார்கள் என்றால் ஞாபகமில்லை. என் கணவரை மருத்துவமனைக்கு அழைத்துச் சென்றபோது நான் உடன் செல்லவில்லை. நான் போலீசாருக்கு தகவல் கொடுத்துவிட்டு அப்படியே மருத்துவமனைக்குச் சென்றுவிட்டேன். போலீசார் அரசு மருத்துவமனைக்கு உடனடியாக வந்துவிட்டார்களா என்றால் ஞாபகமில்லை. நான் அரசு மருத்துவமனைக்கு வந்தபோதே உறவினர்கள் நிறையப்பேர் மருத்துவமனைக்கு வந்துவிட்டார்கள். என் கணவரை யார் மருத்துவமனையில் சேர்த்தார்கள் என்ற விபரம் தெரியுமா என்றால் தெரியாது. போலீசார் பெற்ற புகார் வாக்குமூலத்தில் யார், யார் கையொப்பமிட்டார்கள் என்ற விபரங்கள் எனக்கு தெரியாது.

**11. என் கணவரை அரசு மருத்துவமனைக்கு எந்த வாகனத்தில் அனுப்பிவைத்தேன் என்றால் ஞாபகமில்லை. சம்பவம் நடந்ததாகச் சொல்லப்படும் நேரம் நான் மண்டபத்திற்குள் இருந்தேனா என்றால் மண்டபத்திற்கு முன்பு கூட்டமாக இருந்தது. கூட்டத்தில் நானும் இருந்தேன். நான் போலீசார் விசாரணையில் சொல்லியுள்ளதுபோல் எவ்வித சம்பவமும் நடைபெறவில்லை என்றும், 2வது எதிரியை அவர் நடத்தி வந்த கடையிலிருந்து காலி செய்யவேண்டும் என்ற எண்ணத்துடன் மடத்தின் நிர்வாகிகள் சொன்னதுபோல் என் கணவர் கொடுத்த புகாரின் அடிப்படையிலான வழக்கில் பொய்யாக சாட்சியமளிக்கிறேன் என்றால் சரியல்ல. நான் சொல்லியுள்ளதுபோல் என் கணவருக்கு காயம் ஏற்படவில்லை என்றும், நான் பொய்யாக சாட்சியமளிக்கிறேன் என்றும் சொன்னால் சரியல்ல.**

K. BHARATHI — Digitally signed by K. BHARATHI Date: 2025.08.07 18:49:34 +0530

**கூடுதல் சார்பு நீதிபதி,**
**பழனி.**